M.VENKATESAN PG ASSISSTANT ( HISTORY ) GBHSS AYAPPAKKAM,CHENNAI – 77.

# மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மார்ச் - 2023

வரலாறு மொத்த மதிப்பெண்கள் : 90

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 X 1 = 20

| A | B |
|---|---|
| 1. ஈ. 1925. | 1. ஈ. லின்லித்கோ பிரபு. |
| 2. ஈ. மதன்மோகன் மாளவியா. | 2. இ. நார்வே. |
| 3. ஆ. அன்னிபெசன்ட். | 3. ஈ. 7 மாகாணங்கள். |
| 4. ஆ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. | 4. ஈ. ஜவஹர்லால் நேரு. |
| 5. இ. லாலா லஜபதி ராய். | 5. ஈ. ஆட்டோ வான் பிஸ்மார்க். |
| 6. A. O. ஹியூம். | 6. ஈ. 1789 - 1795. |
| 7. ஈ. லின்லித்கோ பிரபு. | 7. ஆ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. |
| 8. ஆ. i, ii. | 8. ஈ. மதன்மோகன் மாளவியா. |
| 9. இ. நார்வே. | 9. A. O. ஹியூம். |
| 10. ஆ. சுயராஜ்யக் கட்சி. | 10. இ. லாலா லஜபதி ராய். |
| 11. ஆ. மறுமலர்ச்சி. | 11. ஈ. 1925. |
| 12. ஆ. ii, i, iii. | 12. ஆ. மறுமலர்ச்சி. |
| 13. இ. சீன - ஜப்பானியப் போர். | 13. ஆ. செங்கோட்டை, புதுடில்லி. |
| 14. அ. 100. | 14. ஆ. 1915. |
| 15. ஆ. 1915. | 15. ஆ. சுயராஜ்யக் கட்சி. |
| 16. ஈ. ஆட்டோ வான் பிஸ்மார்க். | 16. ஆ. ii, i, iii. |
| 17. ஈ. ஜவஹர்லால் நேரு. | 17. இ. சீன - ஜப்பானியப் போர். |
| 18. ஆ. செங்கோட்டை, புதுடில்லி. | 18. ஆ. i, ii. |
| 19. ஈ. 7 மாகாணங்கள். | 19. அ. 100. |
| 20. ஈ. 1789 - 1795. | 20. ஆ. அன்னிபெசன்ட். |

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 X 2 = 14

21. தொடக்ககால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.
- ❖ சுரேந்திரநாத் பானர்ஜி , பத்ருதீன் தியாப்ஜி , ∴பெரோஸ்ஷா மேத்தா.
- ❖ கோபாலகிருஷ்ண கோகலே, தாதாபாய்நௌரோஜி, w.c. பானர்ஜி.
- ❖ பாலகங்காதர திலகர், பிபின்சந்திர பால், லாலாலஜபதி ராய், அரவிந்தகோஷ்.

22. மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்?
- ❖ சுதேசி என்பதன் பொருள் ஒருவரது சொந்த நாடு' என்பதாகும்.
- ❖ சொந்த நாட்டின் உற்பத்தி பொருட்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- ❖ அப்பொருட்கள் குறைவான மனநிறைவைக் கொடுத்தாலும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

23. பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக.
- ❖ தீண்டாமைக் கொடுமைக்கெதிராக Dr. அம்பேத்கார் இச்சபையை நிறுவினார்.
- ❖ இதன் பொருள் தனித்து விடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு ஆகும்.
- ❖ இச்சபையின் மூலம் தாழ்த்தப்பட்டவர்களின் திறன் குறைபாடுகளை களைய முயன்றார்.

24. இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?
- ❖ சாண்டர்ஸ் கொலை வழக்கில் ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ், பகத்சிங் ஆகியோர் கைது செய்யப்பட்டனர் .
- ❖ இவ்வழக்கு இரண்டாவது லாகூர் சதி வழக்கு என்று அறியப்படுகிறது.
- ❖ இவ்வழக்கில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

M.VENKATESAN PG ASSISSTANT ( HISTORY ) GBHSS AYAPPAKKAM,CHENNAI – 77.

25. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக?.
- வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.
- சிறுபான்மையினரின் உரிமைகளை அங்கீகரித்தல்,
- இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக் குழுவை உருவாக்குதல்.

26. ஜே.வி.பி. குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?
- ஜே.வி.பி. குழு மொழிவாரி மாகாண கோரிக்கையை நிராகரித்தது
- மொழிவாரி மாகாணங்கள் "குறுகிய பிராந்தியவாதத்தை" வலியுறுத்துகின்றன என்று இக்குழு கூறியது.
- "மொழியானது பிணைக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு பிரிக்கும் ஆற்றலும் உடையது" என்று இக்குழு குறிப்பிட்டது.

27. நாடு விடுதலை அடைந்த போது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் குறித்து ஒரு குறிப்பு வரைக..
- வறுமையின் அளவு மிக அதிகமாக இருந்தது.
- கைவினைஞர்கள் பலர் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்திருந்தனர்;.
- வேளாண்மையிலிருந்து பெறப்படும் தனிநபரின் தலா வருமானமும் குறைந்திருந்தது.

28. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என ஏன் கூறினார்?
- வியன்னா காங்கிரசால் இத்தாலி எட்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் இத்தாலி 'பன்னிரெண்டு பெருமாநிலங்களையும் பல குறுநிலங்களையும்' உள்ளடக்கியதாக இருந்தது.
- எனவேதான் இத்தாலி 'வெறும் பூகோள வெளிப்பாடே' என்று மெட்டர்னிக் குறிப்பிட்டார்.

29. ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.
- கடற்போரான இது டென்மார்க்கின் ஜட்லாந்து தீபகற்பத்திற்கு அருகில் நடந்தது.
- இப்போர் முடிவுபடாத ஒரு போராக இருந்தது.
- ஜட்லாந்து போர் முதல் உலகப்போரின் மிகப்பெரும் கடற்போராக நினைவில் கொள்ளப்படுகிறது.

30. ஹிட்லர் பற்றி எழுதுக.
- ஜெர்மனியில் நாசிசக் கட்சியை தோற்றுவித்தார்.
- இரண்டாம் உலகப்போருக்கு முக்கிய காரணகர்த்தா ஆவார்.
- யூத எதிர்ப்புக் கொள்கையை பின்பற்றினார்.
- .என்ற சுயசரிதையை எழுதினார் "எனது போராட்டம்"
- வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தை மீறுவதை அடிப்படைக் கொள்கையாக வைத்திருந்தார்.

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 X 3 = 21

31. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.
- தன்னாட்சி, மக்களாட்சி, போன்ற நவீன சிந்தனைகளை மக்களுக்கு பரப்பியது.
- அரசியலை விமர்சனம் செய்தன.
- நாட்டினைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து மக்களிடம் பேசின.
- மக்கள் நலன் சார்ந்த முக்கியப் பொது விஷயங்களை மக்களுக்குக் கற்றுக் கொடுத்தன.

32. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.
- 1. பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது.
- 2. தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது .
- திலகர் மற்றும் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையில் இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- இரு இயக்கங்களின் வரையறைகளும் தெளிவாக வகுக்கப்பட்டிருந்தன.

33. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
- சத்தியபால், சாய்புதீன்கிச்லு ஆகியோரைக் கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் மக்கள் கூடியிருந்தனர்.
- இம்மைதானத்தில் ஒரே ஒரு குறுகிய வாயில் மட்டுமே இருந்தது.
- அங்கு சிக்கிக் கொண்ட மக்களைக் குறி வைத்து எந்திரத் துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும் வரை சுடுமாறு ஜெனரல் டையர் உத்தரவிட்டார்.
- அரசு தகவல்களின்படி உயிரிழப்புகள் 379 என்ற எண்ணிக்கையில் இருந்தது.

34. சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்கவும்.
- டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.
- போருக்குப்பின் அரசியல் சாசன வரைவுக்குழுவை உருவாக்குதல்.
- இவ்வரைவுக்குழு மாகாண சபைகளில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களைக் கொண்டிருக்கும்.
- சுதேச அரசுகளை பொறுத்த வரையில் நியமிக்கப்பட்டவர்களைக் கொண்டிருக்கும்.

35. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
- குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள்.
- அரசு கொள்கைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்.
- சுதந்திரமான தேர்தல்ஆணையம்.
- வயது வந்தோர் அனைவருக்குமான வாக்குரிமை.
- நீதித்துறையின் சுதந்திரத் தன்மை.

36. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை.
- இந்தியா உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது.
- உற்பத்தித்திறன் அதிகரித்தது.
- உபரி உணவு தானியங்களை அரசு சேமிப்புக் கிடங்குகளில் சேமித்து வைத்தது.
- மக்களுக்கான உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது.

37. 1492இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.
- 1492 இல் பாலோஸ் துறைமுகத்திலிருந்து 3 சிறிய கப்பல்கள் மூலமாகப் பயணம் மேற்கொண்டார்.
- இரண்டு மாத பயணத்துக்குப் பிறகு இந்தியா என்று அவர் நம்பிய நிலப்பகுதியை வந்தடைந்தார்.
- ஆனால் உண்மையில் அது அமெரிக்கா எனும் ஒரு புதிய கண்டமாகும்.
- தான் கண்டுபிடித்த நிலப்பகுதி இந்தியா என்று அவர் நம்பியதால் அம்மக்கள் இந்தியர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

38. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக
- 1956 இல் எகிப்தின் குடியரசுத்தலைவரான நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார்.
- இக்கால்வாய் ஆங்கிலோ - பிரெஞ்சு சூயஸ் கால்வாய்கழகத்திற்குச் சொந்தமாக இருந்தது.
- எனவே இஸ்ரேலிய, பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் படைகள் சினாய் தீபகற்பம் மீது படையெடுத்தன.
- ஐ.நா.சபையின் படைகள் இஸ்ரேலிய, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப்படைகளை வெளியேற்றின.

39. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
- பெரும் சக்தி என்ற நிலையில் இருந்து ஜெர்மனி வீழ்ந்தது.
- ஐரோப்பா தனது அந்தஸ்தையும், கௌரவத்தையும் இழந்தது.
- பொருளாதாரம் சரிந்து நொறுங்கியது.
- உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் ரஷ்யாவும் உருவானது.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



40. அணிசேரா இயக்கம் பற்றி எழுதுக.

- இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலக நாடுகள் இரண்டு அணிகளாக பிரிந்திருந்த போது அணிசேரா இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- அணிசேரா இயக்கத்தின் முதல் மாநாடு பெல்கிரேடில் நடைபெற்றது.
- அணிசேரா இயக்கம் என்ற வார்த்தையை முதன் முதலில் பயன்படுத்தியவர் V K கிருஷ்ணமேனன்.
- அணிசேரா இயக்கத்திற்கான அடித்தளத்தை பாண்டுங் மாநாடு ஏற்படுத்திக் கொடுத்தது.
- அணிசேராமையின் முக்கியத்துவம் மற்றும் உலகத்துக்கு அதன் தேவை குறித்து நேரு விளக்கினார்.

<u>அணிசேரா இயக்கத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் பின்வருமாறு</u> ;

- அடிப்படை மனித உரிமைகளை மதித்தல்.
- ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் மதித்தல்.
- அனைத்து நாடுகளின் இறையாண்மையையும் அவற்றின் எல்லைப்பரப்பு ஒருமைப்பாட்டையும் மதித்தல்.
- அனைத்து இனங்களும், அனைத்து நாடுகளும் சமம் என அங்கீகரித்தல்.
- அடுத்த நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமலும் குறுக்கீடு செய்யாமலும் இருத்தல்.
- ஒருநாடு மற்றநாடுகளுக்கு எதிராக நெருக்கடிகளை தருதல் என்பதைப் பயன்படுத்தக்கூடாது.
- அனைத்துப் பன்னாட்டுப் பிரச்சனைகளுக்கும் அமைதியான வழியில் தீர்வு காணப்படவேண்டும்.
- பரஸ்பர அக்கறை, ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- நீதி மற்றும் பன்னாட்டு கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 X 5 = 35

41.அ .பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தன்ற காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகளை ஆய்க.

- இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர் சிதைத்தனர்.
- விலைகளில் ஏற்படும் வீழ்ச்சி, வறட்சி, பஞ்சம் போன்ற நேரங்களிலும் நிலவரியைப் பணமாக வசூலித்தனர்.
- வேளாண்மை வணிகமயமாக்கப்பட்ட போதிலும் விவசாயிகளின் வாழ்க்கையில் எந்த ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை.
- ஆங்கிலஅரசு கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வணிகம் (*laissez faire*) எனும் கொள்கையைப் பின்பற்றியது.
- இதனால் கச்சாப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கான இடமாக இந்தியா மாறியது.
- இங்கிலாந்துப் பொருட்கள் தடையின்றி இறக்குமதி செய்யப்பட்டதால் அவை இந்திய சந்தையில் மலை போல் குவிந்தன.
- இதன் விளைவாக இந்தியாவில் நெசவாளர், தச்சர், கொல்லர், போன்ற கைவினைஞர்கள் வேலையற்றோர் ஆயினர்.
- பஞ்சங்களின் போதும் ஆங்கிலேயர்கள் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர். இதனால் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் மாண்டனர்

41. ஆ. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

- நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மாகாணங்கள் சுதந்திரமாகச் செயல்படவேண்டும்.
- மத்திய மற்றும் மாகாண சட்டமேலவைகளின் உறுப்பினர்களில் 4/5 பங்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், 1/5 பங்கு நபர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.
- மாகாண மற்றும் மத்திய சட்டப் பேரவைகளின் 4/5 உறுப்பினர்கள் வாக்குப்பதிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- மத்திய நிர்வாக சபை உறுப்பினர்களில் 1/2 பங்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களாக இருக்க வேண்டும்.
- மாகாணசபைத் தேர்தல்களில் முஸ்லிம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்கியதை காங்கிரஸ் ஏற்றது.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

- மத்திய மற்றும் மாகாண அரசுகள் தங்களது சபைகள் நிறைவேற்றிய தீர்மானங்களை செயல்படுத்த வேண்டும்.
- தடுப்பாணை அதிகாரம் பெறும் ஒரு தீர்மானம் ஓராண்டிற்குள் மீண்டும் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அது செயல்பாட்டுக்கு வரும்.
- ஏகாதிபத்திய அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சமநிலை பெற்றிருக்க வேண்டும்.

42. அ. இந்திய தேசிய இயக்கத்தில் வ. உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக

- ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றார்.
- அதன்படி சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எனும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- வ.உ.சி. s.s.கலியா, s.s.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கியபோது தமிழ்நாட்டின் சுதேசி இயக்கம் தேசத்தின் கவனத்தைப் பெற்றது.
- சுதேச இயக்கத்திற்கு ஆதரவாக இந்தியாவின் பண்டையகால கடற்பயணப் பெருமைகளை துணையாகக் கொண்டார்.
- கோரல்மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை, வாழ்க்கைச் சூழல்கள் ஆகியவற்றை எதிர்த்து சிவாவுடன் இணைந்து குரல் கொடுத்தார்.
- இதனால் ஏற்பட்ட போராட்டத்தின் விளைவாக ஆலை முதலாளிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தனர்.
- பிபின் சந்திரபாலின் விடுதலையை சுதேசி தினமாக திருநெல்வேலியில் தடையை மீறி கொண்டாடினார்.
- இதன் விளைவாக கைது செய்யப்பட்டு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப் பெற்றார்.

42. ஆ. 1919-1939ஆம் ஆண்டுகளுக்கிடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.

- உலக சராசரியை விட இந்தியத் தொழில்களின் வளர்ச்சி சிறப்பாக இருந்தது.
- ஒரு சிறிய தடுமாற்றத்திற்குப் பிறகு, நெசவுத் தொழில் சிறப்பாக செயல்படத் தொடங்கியது.
- தறிகள் மற்றும் சுழல் அச்சுக்கள் எண்ணிக்கையில் கணிசமாய் உயர்ந்தன.
- இந்தியாவால் வெளியில் இருந்து நுகர்வு செய்யப்பட்ட பருத்திப் பொருட்கள் 20.5 % ஆக குறைந்தது.
- சர்க்கரை உற்பத்தியும் சிமெண்ட் உற்பத்தியும் இக்காலக்கட்டத்தில் வளர்ச்சி பெற்றன.
- கப்பல் தொழிலில் சிந்தியா நீராவிக் கப்பல் கம்பெனி முன்னோடியாக விளங்கியது .
- 1939இல், அவர்கள் பிரிட்டிஷாரின் பம்பாய் நீராவிக் கப்பல் நிறுவனத்தையும் வாங்கினர்.
- இயந்திர உற்பத்தி, விமானப் போக்குவரத்து, ரயில்பெட்டி, ரயில் எஞ்சின் உற்பத்தி ஆகியன மேற்கொள்ளப்பட்டன.
- கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரையில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

43. அ. ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

- கூட்டு இந்திய அடையாளம் ஒன்று உருவாவது தடுக்கப்பட்டது.
- இந்தியர்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகள் முறியடிக்கப்பட்டது.
- பிரித்தாளும் கொள்கையின் ஒரு பகுதியாக தனித்தொகுதிகள் அறிவிக்கப்பட்டன.
- தனித்தொகுதிகள் என்ற அறிவிப்பின் மூலம் ஆங்கிலேயரின் பிரித்தாளும் கோட்பாடு அரசமைப்பு சட்டத்தில் முறையாக நுழைந்தது.
- அனைத்துக்கட்சிகளும் குறுங்குழுவாத அணுகுமுறையைப் பின்பற்றின.
- வட இந்தியாவில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையேப் பகைமை வளர்ந்தது.
- 19ஆம் நூற்றாண்டின் கடைசி பகுதியில் ஏராளமான இந்து-முஸ்லிம் கலவரங்கள் வெடித்தன.
- ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை முஸ்லீம் லீக் உருவாவதற்கு வழிவகுத்தது. இறுதியில் அது இந்திய பிரிவினைக்கு வழிவகுத்தது.

43. ஆ. இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

- சம்ப்ரான் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இந்திய மக்களை ஒன்றிணைக்கும் முதல் முயற்சியை மேற்கொண்டார்.
- ரௌலட் சட்டத்துக்கு எதிராக வேலை நிறுத்தத்தை கடைபிடிக்குமாறு அழைப்பு விடுத்தார்.
- இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒன்றிணைந்த கிலாபத் இயக்கத்தை இத்துடன் இணைத்தார்.
- கிலாபத் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்க வலியுறுத்தினார்.
- வன்முறையற்ற வகையில் ஒத்துழையாமை இயக்கத்தை பின்பற்றினால் ஓராண்டுக்குள் சுயராஜ்யத்தை பெற்று தருவேன் என்றார்.
- சட்ட மறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக தண்டி யாத்திரையை மேற்கொண்டார்.
- பிரிட்டிஷார் அளித்த வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்துக் காந்தியடிகள் சாகும்வரை உண்ணாவிரதம், மேற்கொண்டார்.
- பின்னர், காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே பூனாஒப்பந்தம் கையெழுத்தானது.
- இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் தனிநபர் சாத்தியகிரகத்தை தொடங்கினார்.
- கிரிப்ஸ் தூதுக்குழுவின் அறிக்கையை ஏற்க மறுத்து வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கினார்.

44. அ. 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.

- 1920 முதலே விடுதலை இயக்கத்தோடு, மொழிவாரி மாநிலக் கோரிக்கை ஒன்றிணைந்திருந்தது.
- 1928இல் வெளியான நேரு அறிக்கை மொழிவாரி கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்றது.
- 1945ஆம் ஆண்டு காங்கிரஸ் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மொழிவாரி மாகாணங்கள் பற்றிய கருத்து ஆணித்தரமாக இடம் பெற்றிருந்தது.
- 1946 இல் பட்டாபி சீதாராமையா ஆந்திரா ஆந்திரா மாகாணத்திற்கான கோரிக்கையை அரசமைப்பு நிர்ணயசபையின் முன் வைத்தார்.
- 1948, இல் இராஜேந்திர பிரசாத் மூவர் ஆணையம் ஒன்றை அமைத்தார்.
- மூவர் ஆணையமும் J.V.P கமிட்டியும் (1949) மொழிவாரி மாகாண கோரிக்கையை நிராகரித்தன.
- ஆந்திரா தனி மாநிலமாக பிரிக்கப்பட வேண்டுமென உண்ணாவிரதம் இருந்த பொட்டி ஸ்ரீ ராமுலு 1952 இல் -உயிரிழந்தார்.
- இதனைத் தொடர்ந்து பசல் அலியைத் தலைவராக கொண்ட மாநில மறுசீரமைப்பு ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில் மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1956இல் நிறைவேற்றப்பட்டது.

44. ஆ. இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

- கணிதம் மற்றும் அறிவியல் துறைகளில் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்காக டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டது.
- புனே தேசிய வேதியியல் ஆய்வகம், புதுதில்லி தேசிய இயற்பியல் ஆய்வகம் ஆகியன ஏற்படுத்தப்பட்டன.
- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் எனும் அமைப்பு இயந்திரங்கள், மருந்துகள் விமானங்கள் ஆகியவை குறித்த ஆய்வினை முன்னெடுக்கிறது.
- அணுசக்தி ஆணையமானது அணு அறிவியலின் வளர்ச்சிக்கு மையமாகத் திகழ்கிறது.
- வேளாண்மை துறையில் நடைபெறும் ஆய்வுகளை இந்திய வேளாண் ஆய்வுக்கழகம் ஒருங்கிணைக்கிறது.
- இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் பொறியியலின் வெவ்வேறு பிரிவுகளுக்காக நிறுவப் பெற்ற சிறப்பு நிறுவனங்களாகும்.
- முதல் IIT கரக்பூரில் நிறுவப்பெற்றது. அதனைத் தொடர்ந்து டெல்லி, பம்பாய், கான்பூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் IIT உருவாக்கப்பட்டன.

45. அ. பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்கள் யாவை? ( ஏதேனும் 7 குறிப்புகள் )

விவசாயிகளின் நிலை :

- பிரெஞ்சு சமூகத்தில் பெரும்பகுதியாக இருந்தவர்கள் விவசாயிகளேஆவர். அவர்கள் கொத்தடிமைகளாக இருந்தனர்.
- வாரத்தில் சிலநாட்கள் ஊதியம் ஏதுமின்றி தங்கள் பிரபுக்களுக்காக அவர்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது.
- ஒரு விவசாயி தன்னுடைய வருமானத்தில் 80 விழுக்காட்டை பலவிதமான வரி வசூலிப்பாளர்களிடம் வரியாகச் செலுத்தினார் என மதிப்பிடப்பட்டது.

மூன்று எஸ்டேட்டுகள் :

- 1. மதகுருமார்கள், 2. நிலப்பிரபுக்கள், 3. உரிமைகளற்ற சாதாரண மக்கள்.
- மதகுருமார்களும், பிரபுக்களும் பல வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தனர்.
- மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவர்களே வரிவிதிப்பின் கொடுமைகளை எதிர்கொள்ள நேர்ந்தது.
- திருச்சபையால் வசூலிக்கப்பட்ட டைத் எனும் வரி, டெய்ல் எனும் பெயரில் செலுத்தப்பட்ட நிலவரி, காபெல் எனும் உப்பின் மீதான வரி, புகையிலையின் மீதான வரி, ஆகியவை முக்கியமான வரிகளாகும்.

நிதி நிர்வாகச் சீர்கேடு :

- அண்டை நாடான ஆங்கிலப் பேரரசுடன் பிரான்ஸ் தொடர்ந்து போர் மேற்கொண்டதால் கருவூலத்திற்குப் பெருஞ்செலவை ஏற்படுத்தியது.
- வட்டிக்குக்கடன் கொடுப்போரிடமிருந்து அரசு பெற்ற கடன்தொகை அதிகமானதால், பெற்ற கடன்களுக்கு அரசு அதிகமாக வட்டி செலுத்த வேண்டியதாயிற்று.
- கடன்களை அடைப்பதற்காக அரசு சாதாரண மக்களின் மீது அதிக வரிகளைச் சுமத்தியது.

அறிவார்ந்த மக்களின் பங்கு :

- பிரெஞ்சுப் புரட்சிக்கான சமூகத்தை தயார் செய்ததில் அறிவார்ந்த மக்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.
- வால்டேர், ரூசோ ஆகியோரின் எழுத்துக்கள் புரட்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தன.
- மாண்டெஸ்கியூ அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை எதிர்த்தார்.
- ரூஸோ ஆள்வோர்க்கும் ஆளப்படுவோருக்குமான உறவு ஓர் ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென வாதிட்டார்.

45. ஆ. முதல் மற்றும் இரண்டாம் உலகப்போரின் ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிடுக.

ஒற்றுமைகள் : ( ஏதேனும் மூன்று குறிப்புகள் )

- இரண்டு உலகப் போர்களிலும் ஜெர்மனி தோல்வியை சந்தித்தது.
- இரண்டு உலகப் போர்களிலும் மில்லியன் கணக்கான மக்கள் பலியாயினர்.
- உலக அமைதிக்காக முதல் உலகப்போரின் முடிவில் பன்னாட்டு சங்கமும், இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஐ.நா.சபையும் தோற்றுவிக்கப்பட்டது.
- இரண்டு போர்களிலும் அமெரிக்கா சில ஆண்டுகள் கழித்தே போரில் இறங்கியது.
- இரண்டு போர்களின் முடிவிலும் பொருளாதாரம் வெகுவாக பாதித்தது.

வேற்றுமைகள் : ( ஏதேனும் மூன்று குறிப்புகள் )

- முதல் உலகப்போரில் நேச நாடுகள் அணியிலிருந்த ஜப்பான், இரண்டாம் உலகப்போரில் அச்சு நாடுகள் அணியிலிருந்து போரிட்டது.
- முதல் உலகப்போரின் முடிவில் தோற்றுவிக்கப்பட்ட பன்னாட்டுசங்கம் தோல்வியடைந்தது.
- ஆனால் இரண்டாம் உலகப்போரின் முடிவில் தோற்றுவிக்கப்பட்ட ஐ.நா.சபை இன்றளவும் வெற்றிகரமாக செயல்படுகிறது.
- முதல் உலகப்போரில் தோல்வியுற்ற நாடுகள் மீது கடுமையான உடன்படிக்கைகள் திணிக்கப்பட்டன.
- ஆனால் இரண்டாம் உலகப்போரின் முடிவில் அது போன்ற உடன்படிக்கைகள் ஏதும் திணிக்கப்படவில்லை.

M.VENKATESAN PG ASSISSTANT ( HISTORY ) GBHSS AYAPPAKKAM,CHENNAI – 77.

- முதல் உலகப்போரின் முடிவில் உலக ஆதிக்க சக்திகளாக பிரிட்டனும்,பிரான்சும் இரண்டாம் உலகப்போரின் முடிவில் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் எழுச்சிப் பெற்றன.

46. ஆ. இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.

- முதல் உலகப்போரின் முடிவில் ஜெர்மனியின் மீது பல கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.
- அதன் கட்டுப்பாட்டில் இருந்த காலனிய நாடுகள் பிரித்தெடுக்கப்பட்டதால் அதன் படையளவு மோசமாக சுருங்கியது.
- அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்சிடம் விட்டுக் கொடுத்தது.
- சார் பள்ளத்தாக்கில் பிரான்ஸ் தற்காலிகமாகப் படைகளை நிறுத்திக் கொள்ள ஜெர்மனி நிர்ப்பந்திக்கப்பட்டது.
- தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான சைலேசியாவை போலந்திடம் ஒப்படைக்கவும் ஜெர்மனி கட்டாயப்படுத்தப்பட்டது.
- மேலும் 6,600 மில்லியன் பவுண்டுகள் போர் இழப்பீடாக ஜெர்மனியிடம் கோரப்பட்டது.
- ஆஸ்திரியா, ஜெர்மனியிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டது.
- இத்தகைய மோசமான சரத்துக்கள் ஜெர்மனியில் நாஜி கட்சியின் அரசியல் வெற்றிக்கு வழிவகுத்தது.

47. அ. போரிஸ் யெல்ட்சினின் அரசியல் வளர்ச்சியைக் குறிப்பாக சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் அவர் வகித்த பங்கின் மீது கவனம் குறித்து விவரிக்கவும்.

- போரிஸ் யெல்ட்சின் 1961இல் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்த இவர் 1968இல் கட்சியின் முழுநேர ஊழியரானார்.
- பின்னர் மாஸ்கோ கட்சி அமைப்பிலுள்ள ஊழல்களைக் களைவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1986இல் யெல்ட்சின் பொலிட்பீரோவின் உறுப்பினராக உயர்த்தப்பட்டார்.
- விரைவில் அவர் மாஸ்கோவின் மேயராக நியமிக்கப்பட்டார்.
- நிர்வாகம் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும், பொருளாதாரம் சீர்திருத்தப்பட வேண்டும் என்றார்.
- சோவியத் யூனியனின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஒரு இடத்தைப் பெறுவதில் வெற்றி பெற்றார்.
- கோர்பச்சேவின் விருப்பத்திற்கு எதிராக சோவியத் பாராளுமன்றம் யெல்ட்சினை ரஷ்ய குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.
- இவரே சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் 1991இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவரானார்.